மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வியாக இருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர், அந்தப் பகுதியில் பணிமனை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு தேவையான அளவிற்கு பேருந்துகள் இருக்குமாயின், புதிய பணிமனை அமைப்பதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் வயதை 60 ஆக உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110—ன்கீழ் அறிக்கை. பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் வயதை 58—லிருந்து 59 ஆக உயர்த்தி, கடந்த ஆண்டு மே மாதம் எனது உத்தரவின்பேரில் அரசாணை வெளியிடப்பட்டது. அரசுப் பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது தற்போது அமலில் உள்ள 59 வயது என்பது 60 வயதாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உத்தரவு அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள், அரசமைப்பு மற்றும் சட்டரீதியான அமைப்புகள், அரசு நிறுவனங்கள்,

2021 பிப்ரவரி 25] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

உள்ளாட்சி அமைப்புகள், வாரியங்கள், ஆணையங்கள், சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் பொருந்தும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உத்தரவு தற்போது அரசுப் பணியில் இருக்கும் அனைவருக்கும் மற்றும் இந்த ஆண்டு, அதாவது, 31–5–2021 அன்று பணியிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கும் பொருந்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) 2020-2021 ஆம் கல்வியாண்டில் 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணாக்கர்கள் தேர்வுகள் ஏதுமின்றி தேர்ச்சி குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைத் தடுப்பதற்காக மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டில் 25–3–2020 முதல் தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின்கீழ் ஊரடங்கு உத்தரவு பல்வேறு தளர்வுகளுடன் அமலில் இருந்து வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த நோய்த் தொற்றிலிருந்து மக்களைக் காத்து, அவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கி, முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

2020–2021 ஆம் கல்வியாண்டில் கொரோனா நோய்த் தொற்று பரவலைத் தடுப்பதற்கு பள்ளிகள் மூடப்பட்டு, கொரோனா நோய்த் தொற்று ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் தேதி முதல், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. அனைத்து மாணவர்களுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க ஏதுவாக வைட்டமின் மற்றும் துத்தநாக மாத்திரைகள் வழங்கப்பட்டன. இந்தக் கல்வியாண்டு முழுவதும் மாணாக்கர்கள் கல்வித் தொலைக்காட்சி மூலமாக மட்டுமே கல்வி பயின்று வந்தனர். மாணாக்கர்கள் தொலைக்காட்சி மூலமாகவும், இணையதளம் மூலமாகவும் கல்வி பயின்று வருவதில் ஏற்படும் சிரமங்களைக் கருத்தில்கொண்டு, பாடத் திட்டங்கள் குறைக்கப்பட்டன.

மேலும், இந்தக் கல்வியாண்டில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொண்ட அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில்கொண்டும், பெற்றோர்களின் கோரிக்கையைக் கருத்தில்கொண்டும், கல்வியாளர்களின் கருத்துகளைப்